# அகதிகள் உரிமை கோருபவர்களுக்கான தகவல்

## 1. பொதுவான தகவல்

அகதி கோரிக்கைகளை கையாளும் கனடா அரசின் துறைகளாவன:

- **குடியேற்றம், அகதிகள் மற்றும் குடியுரிமை கனடா (IRCC)** (www.cic.gc.ca): கனடாவிற்குள் செய்யப்படும் அகதி கோரிக்கையானது, கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் வாரியத்திற்கு (IRB) பரிந்துரைக்கப்படுவதற்கு தகுதி உள்ளதா என்பதை (IRCC) தீர்மானிக்கிறது.
- **கனடா எல்லை சேவைகள் நிறுவனம் (CBSA)** (www.cbsa-asfc.gc.ca): ஒரு அகதி உரிமைகோரல், கனேடிய நுழைவுத் துறைமுகத்தில் (அதாவது ஒரு விமான நிலையம், நில எல்லை கடப்பு அல்லது கடல் துறைமுகம்) அல்லது உள்நாட்டு அமலாக்க அலுவலகத்தில் செய்யப்பட்டதா என்பதையும், IRB க்கு பரிந்துரைக்க தகுதியானதா என்பதையும் CBSA தீர்மானிக்கின்றது.
- **கனடாவின் குடிவரவு மற்றும் அகதிகள் வாரியம் (IRB)** (www.irb-cisr.gc.ca): IRB என்பது குடியேற்றம் மற்றும் அகதி முடிவுகளை எடுக்கும் ஒரு சுதந்திரமான அமைப்பு.

## 2. உங்கள் அகதி கோரிக்கையை சமர்ப்பித்தல்

நீங்கள் அகதி பாதுகாப்பு கோரலாம்:

நீங்கள் நுழைவு துறைமுகத்திற்கு வரும் போது CBSA அதிகாரியிடம் நேரில்;

**அல்லது,**

நீங்கள் ஏற்கனவே கனடாவிற்குள் இருந்தால், நிகழ்நிலையில் கனேடிய அகதிகள் பாதுகாப்பு இணைய முகப்பு "(Canadian Refugee Protection Portal) (CRPP)" வழியாக.

நீங்கள் தகுதியானவரா என்பதை ஒரு அதிகாரி உடனடியாக தீர்மானிக்க முடியாவிட்டால், அவர்கள் உங்களுக்கு **உரிமைகோரல் ஆவணத்தின்** (Acknowledgement of Claim) ஒப்புதலை வழங்குவார்கள். இது ஒரு தற்காலிக ஆவணம், அது

- நீங்கள் ஒரு அகதி உரிமைகோரலைச் செய்துள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறது.
- நீங்கள் இடைக்கால கூட்டாட்சி சுகாதார திட்டத்தின் (Interim Federal Health Program) கீழ் உள்ளீர்கள் என்பதை காட்டுகிறது மற்றும்
- நீங்கள் சமுக சேவைகளுக்கு விண்ணப்பிக்கும் போது உதவலாம்.

உங்கள் உரிமைகோரலின் தகுதியை நாங்கள் முடிவு செய்தவுடன், நாங்கள் உங்களுக்கு ஒரு **அகதி பாதுகாப்பு உரிமைகோரல் ஆவணம் "(Refugee Protection Claimant Document) (RPCD)"** வழங்குவோம்.

RPCD ஆனது கனடாவில் அகதி உரிமைகோருபவராக உங்கள் உரிமைகோரல் ஒப்புதலை முதன்மை அடையாள ஆவணமாக மாற்றுகிறது. RPCD என்பது,

- உங்கள் உரிமைகோரல் IRB க்கு பரிந்துரைக்கப்பட்டதைக் காட்டுகிறது.
- சேவைகளை அணுக உங்களுக்கு உதவலாம், மற்றும்
- நீங்கள் இடைக்கால மத்திய சுகாதார திட்டத்தின் கீழ் உள்ளீர்கள் என்பதை காட்டுகிறது.

**தயவு செய்து கவனிக்கவும்:**

- **CRPP மூலம் நிகழ்நிலையில் உங்கள் உரிமைகோரலைச் செய்தால்,** பயோமெற்றிக்ஸ் (கைரேகைகள்) சேகரிப்பதற்கான சந்திப்பை திட்டமிட IRCC ஆல் நீங்கள் தொடர்பு கொள்ளப்படுவீர்கள். நீங்கள் ஒரு தகுதி நேர்காணலிலும் கலந்து கொள்ள வேண்டும்.
- **நீங்கள் ஒரு நுழைவு துறைமுகத்தில் கோரிக்கையை முன் வைத்தால்**, நீங்கள் அடிப்படை படிவத்தை (Basis of Claim) பூர்த்தி செய்ய வேண்டும். இப்படிவத்தை அஞ்சல் செய்ய அல்லது CRPP இல் பதிவேற்ற உங்களுக்கு அறிவுறுத்தப்படலாம். (மேலும் தகவலுக்கு, பிரிவு 11ஐ பார்க்கவும்.) மேலதிக அடுத்த கட்ட நடவடிக்கைகளையும் CBSA உங்களுக்கு அறிவிக்கும்.
- **உங்கள் உரிமைகோரல் தகுதியுடையதாக கண்டறியப்பட்டால்**, நீங்கள் IRB இன் அகதிகள் பாதுகாப்பு பிரிவில் (Refugee Protection Division) உங்கள் விசாரணையில் கலந்து கொள்ள வேண்டும். உங்கள் விசாரணையின் திகதி மற்றும் இருப்பிடத்தை உங்களுக்கு தெரிவிக்க IRB உங்களை பிந்திய திகதியில் தொடர்பு கொள்ளும்.
- உங்கள் உரிமைகோரல் தகுதியற்றதாக கண்டறியப்பட்டால் அல்லது உங்கள் கோரிக்கை IRB ஆல் நிராகரிக்கப்பட்டால், நீங்கள் கனடாவிலிருந்து அகற்றப்படும்வரை இடைக்கால மத்திய சுகாதார திட்டம் மற்றும் மாகாணச் சேவைகளுக்கு உங்களுக்கு உரிமை உண்டு.
- கனேடிய அகதிகள் பாதுகாப்பு இணையதளத்தில் நீங்கள் வழங்கும் தொடர்பு விபரங்கள் (உங்கள் முகவரி, தொலைபேசி எண் மற்றும் மின்னஞ்சல் முகவரி உட்பட) துல்லியமாக இருப்பதை உறுதி செய்யவும்.
- உங்கள் தொடர்புத் தகவல் மாறினால், தயவு செய்து https://secure.cic.gc.ca/enquiries-renseignements/ canada-case-cas-eng.aspx பார்வையிடுவதன் மூலம் மற்றும் "Change of Contact Information" என்பதை தேர்ந்தெடுத்து நிகழ்நிலையில் புதுப்பிக்கவும்.

## 3. இடைக்கால கூட்டாட்சி சுகாதார திட்டம்

இடைக்கால கூட்டாட்சி திட்டத்தின் கீழ் (IFHP), கனடா அரசு சில சுகாதார சேவைகள் அல்லது தயாரிப்புகளின் விலைகளை உள்ளடக்கியுள்ளது. உங்கள் **உரிமைகோரலின் ஒப்புதல்** அல்லது **அகதிகள் பாதுகாப்பு உரிமைகோரல் ஆவணம்**, நீங்கள் IFHP க்கு முழுத்தழுவு தகதியானவரா என்பதை குறிக்கும்.

**IFHP இல் பதிவு செய்யப்பட்ட** தகுதியுள்ள அனைத்து உரிமைகோருபவர்களுக்கும் கனடாவில் எந்தவொரு சுகாதார பாதுகாப்பு வழங்குநரிடமிருந்தும், சுகாதார பாதுகாப்பு சேவைகள் மற்றும் தயாரிப்புகளை அணுகலாம். பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களின் பட்டியல் www.ifhp-pfsi.ca இல் நிகழ்நிலையில் கிடைக்கிறது.

நீங்கள் அவர்களிடமிருந்து ஏதேனும் சேவைகளை பெறுவதற்கு முன் ஒரு சுகாதார பாதுகாப்பு வழங்குநர் IFHP இல் பதிவு செய்யப்பட்டிருப்பதை உறுதிப்படுத்த வேண்டும். **உரிமைகோரல்** அல்லது **அகதிகள் பாதுகாப்பு உரிமைகோரல் ஆவணத்தின்** செல்லுபடியாகும் ஒப்புதல் சுகாதாரப் பாதுகாப்பு வழங்குநருக்கு வழங்கப்பட வேண்டும்.

IFHP பற்றிய கூடுதல் தகவலுக்கு, எந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகள் உள்ளடங்குகின்றன, www.canada.ca/ifhp அல்லது www.ifhp-pfsi.ca ஐ பார்வையிடவும்.

## 4. குடிவரவு மருத்துவ பரிசோதனை

ஒரு அகதி உரிமை கோருபவராக, நீங்கள் **கட்டாய மருத்துவ பரிசோதனைக்கு** உட்படுத்தப்பட வேண்டும். இது IFHP ஆல் செலுத்தப்படுகிறது.

குறிப்பிட்ட மருத்துவர்கள் மட்டுமே இந்த மருத்துவ பரிசோதனைகளை செய்ய முடியும். IMM 1017 மருத்துவ அறிக்கை (Medical Report) படிவத்தில் ஒவ்வொரு மாகாணத்திலும் அல்லது பிரதேசத்திலும் IRCC சார்பாக இந்த தேர்வுகளை செய்யும் மருத்துவர்களின் பட்டியலுக்கான அறிவுறுத்தல்களும் இணைப்பும் கொடுக்கப்பட்டுள்ளன.

IRCC-3302-08-2022_Tam Ci44-25/2021Tam-PDF 978-0-660-42883-3

மருத்துவ சோதனைக்கான சந்திப்பிற்காக தயவு செய்து பட்டியலிலிருந்து ஒரு மருத்துவரை தொடர்பு கொள்ளவும். சந்திப்புக்கு நீங்கள் பின்வரும் ஆவணங்களை கொண்டு வர வேண்டும்:

- IMM 1017 மருத்துவ அறிக்கை படிவம், மற்றும்
- உங்கள் **உரிமைகோரல் ஒப்புதல்** அல்லது **அகதிகள் பாதுகாப்பு உரிமைகோரல் ஆவணம்**.

## 5. வேலை அனுமதி மற்றும் சமூக காப்பீட்டு எண்

கனடாவில் நீங்கள் சட்டபூர்வமாக தொழில் புரிவதற்கு, **வேலை அனுமதி** மற்றும் **சமூக காப்பீட்டு எண் "(Social Insurance Number)"** இருக்க வேண்டும்.

எந்தவொரு முதலாளிக்கும் பணிபுரிய கட்டணம் இல்லாத பணி அனுமதிக்கு நீங்கள் விண்ணப்பிக்கலாம். அது செல்லுபடியாகும் கால அளவு பணி அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிடப்படும்.

IRCC பணி அனுமதி வழங்குவதற்கு முன், பின்வரும் படிகள் நடக்க வேண்டும்:

- உங்கள் உரிமைகோரலின் தன்மை குறித்து ஒரு முடிவு எடுக்கப்பட வேண்டும்.
- உங்கள் குடிவரவு மருத்துவ பரிசோதனை முடித்து தேர்ச்சி பெற வேண்டும். மற்றும்,
- பயோமெற்றிக்ஸ் (கைரேகைகள் மற்றும் புகைப்படங்கள்) எடுக்கப்பட வேண்டும். (பிரிவு 8 ஐ பார்க்கவும்)

நீங்கள் உங்கள் குடிவரவு மருத்துவ தேர்வை முடித்து விட்டீர்கள் என்பதற்கான ஆதாரம் "IME" எண் அல்லது eMedical தகவல் தாளின் நகல் (இதை தேர்வு செய்யும் மருத்துவரிடம் கோரலாம் (பிரிவு 4 ஐ பார்க்கவும்.))

அகதி உரிமைகோரல் செயற்பாட்டின் போது நீங்கள் பணி அனுமதிக்கு விண்ணப்பிக்கவில்லை என்றால், விண்ணப்ப படிவத்தை இந்த இணையதளத்தில் www.cic.gc.ca பின்னர் பெறலாம்.

உங்கள் பணி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றவுடன் , நீங்கள் ஒரு **சமூக காப்புறுதி எண்ணுக்கு** விண்ணப்பிக்க வேண்டும். நீங்கள் இதை நிகழ்நிலையில், அஞ்சல் மூலமாக அல்லது Service Canada Centre மூலமாக நேரில் செய்யலாம். விண்ணப்ப செயல்முறை பற்றிய தகவல் https://www.canada.ca/en/employment-social-development/services/sin.html. இல் காணலாம். உள்ளூர் Service Canada Centre ஐ கண்டறிய 1 800 O-Canada கனடாவை அழைக்கவும். (1-800-622-6232)

## 6. கல்விக்கான அனுமதிகள்

அகதி உரிமைகோரிய அல்லது 18 வயதிற்குட்பட்ட எவரும் அகதி உரிமை கோருபவரின் சார்பு குழந்தையாக இருந்தால், **கல்வி அனுமதி இல்லாமல்** முன்பள்ளி, ஆரம்ப அல்லது இடைநிலை (தரம் 12 வரை) படிக்கலாம். பள்ளி பதிவு செய்ய குழந்தையின் **உரிமைகோரல்** அல்லது **அகதிகள் பாதுகாப்பு உரிமைகோரல் ஆவணம்** தேவை.

பிந்திய இரண்டாம் நிலை (கல்லூரி அல்லது பல்கலைக்கழகம்) படிக்க விரும்பும் அனைத்து விண்ணப்பதாரிகளுக்கும் **படிப்பு அனுமதி தேவை**. கனடாவில் சட்டபூர்வமாக படிப்பதற்கும் ஆய்வு அனுமதி வழங்கப்படுவதற்கு முன்னர் ஒரு குடிவரவு மருத்துவ பரிசோதனை முடித்து தேர்ச்சி பெற வேண்டும்.

ஆய்வு அனுமதிக்கான விண்ணப்பம் www.cic.gc.ca. இல் கிடைக்கிறது. அகதி உரிமைகோருபவர்கள் கல்வி அனுமதிக்கு விண்ணப்பிக்க கட்டணம் இல்லை.

கல்வி அனுமதி விண்ணப்பத்திற்கு பின்வரும் ஆவணங்கள் தேவை:

- **உரிமைகோரல் ஒப்புதல்** அல்லது **அகதிகள் பாதுகாப்பு உரிமைகோரல் ஆவணத்தின்** நகல் (பிரிவு 2 ஐ பார்க்கவும்).
- நியமிக்கப்பட்ட கற்றல் நிறுவனத்திடமிருந்து ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கான ஆதாரம்.
- கியூபெக் மாகாணத்தில் படிக்க, குடிவரவு, சமூக மற்றும் கலாச்சார அமைச்சினால் (Ministère de l'Immigration et des Communautés culturelles) அங்கீகரிக்கப்பட்ட கியூபெக் ஏற்றுக்கொள்ளும் சான்றிதழ் "(Certificat d'acceptation du Québec) (CAQ)" அவசியம். CAQ சான்றிதழ் பெற, மேலதிக விரங்களுக்கு, https://www.immigration-quebec.gouv.qc.ca/en/immigrate-settle/students/ இல் பிரவேசிக்கவும்.

## 7. ஆலோசனை வழங்கும் உரிமை

அகதி உரிமைகோருபவராக, அகதி கோரிக்கையின் போது வழக்கறிஞரால் (ஒரு வழக்கறிஞர் அல்லது பிற தொழில் முறை பிரதிநிதி) **உங்கள் சொந்த செலவில்** பிரதிநிதித்துவப்படுத்த உங்களுக்கு உரிமை உண்டு, **தவிர** எப்பொழுதும் அல்ல நுழைவு துறைமுகத்தில் ஆரம்ப உட்கொள்ளலின் போது. உங்களால் ஆலோசனைக்கு பணம்செலுத்த முடியாவிடின், நீங்கள் ஒரு மாகாண அல்லது பிராந்திய சட்ட உதவி அலுவலகத்திற்கு விண்ணப்பிக்கலாம்.

கனடா அரசாங்கம் அனைவரையும் சமமாக நடத்துகிறது, அவர்கள் ஆலோசகரின் சேவைகளை பயன்படுத்துகிறார்களோ இல்லையோ. நீங்கள் ஆலோசகரை நியமிக்க விரும்பினால், உங்கள் விண்ணப்பத்திற்கு சிறப்பு கவனம் **செலுத்தப்படாது**.

ஒரு பிரதிநிதியை பணியமர்த்துவது பற்றிய தகவல் www.cic.gc.ca/english/ information/representative/index.asp.

**குறிப்பு:** உள்ளூர் தொலைபேசி கோப்பகத்தைப் பார்க்கவும்**,** அல்லது இந்த இணைப்பை பயன்படுத்தவும்**.** மாகாண மற்றும் பிராந்திய சட்ட உதவி சேவைகளின் வலைப்பக்கங்களை பார்க்கவும். https://www.justice.gc.ca/eng/fund-fina/gov-gouv/aid-aide.html.

## 8. பயோமெற்றிக்ஸ் (கைரேகைகள் மற்றும் புகைப்படங்கள்)

நீங்கள் ஏற்கனவே கனடாவில் இருந்தால், CRPP மூலம் அகதிகள் கோரிக்கையை நிகழ்நிலையில் சமர்ப்பித்தால், உங்களிடம் கேட்கப்படும்,

- பயோமெற்றிக்ஸ் சேகரிப்புக்காக ஒரு IRCC அலுவலகத்தில் அறிக்கை செய்யவும்.
- உங்கள் அடையாளச் சான்று மற்றும் பிற அனைத்து தொடர்புடைய ஆவணங்களையும் சமர்ப்பிக்கவும், மற்றும்
- திட்டமிட்ட தகுதி நேர்காணலுக்கு திரும்பவும்.

நுழைவுத் துறைமுகத்தில் உங்கள் கோரிக்கையை நீங்கள் செய்தால், ஒரு CBSA அதிகாரி உங்கள் பயயோமெற்றிக்ஸை எடுத்து அடையாள சான்று மற்றும் பிற தொடர்புடைய ஆவணங்களை சேகரிப்பார். நீங்கள் அங்கு தகுதி நேர்காணலை முடிப்பீர்கள் அல்லது அதிகாரி உங்களை கனடாவிற்குள் நுழைய அனுமதிக்கலாம் மற்றும் தேர்வுக்காக CBSA அலுவலகத்திற்கு திரும்புவதற்கான திகதி மற்றும் நேரத்தை அமைக்கலாம்.

## 9. கனடாவில் தகுதி நேர்காணல் அல்லது நுழைவு துறைமுகத்தில் தேர்வு செயல்முறை

தகுதி நேர்காணல் அல்லது தேர்வில் ஒரு அதிகாரி

- உங்கள் உரிமைகோரல் IRB க்கு பரிந்துரைக்க தகுதியானதா என முடிவு செய்வார்.
- உங்களுக்கு ஒரு RPCD ஐ வழங்குவார். (பிரிவு 2 ஐ பார்க்கவும்)
- அகற்றுவதற்கான உத்தரவை வழங்குவார்:
  - **உங்கள் கோரிக்கை** IRB **க்கு பரிந்துரைக்க தகுதியானது என்றால்**, IRB முடிவு எடுக்கும் வரை நீக்கல் உத்தரவு நிபந்தனையுடன் இருக்கும். (அதாவது நடைமுறையில் இல்லை)
  - **உங்கள் கோரல் தகுதியற்றதாக இருந்தால்**, (தகுதியற்றது) பின்னர் அகற்றும் உத்தரவு **அமுலில் இருக்கும்**.
  - அகற்றுதல் உத்தரவுகளைப்பற்றி மேலும் அறிய, பிரிவு 12ஐ பார்க்கவும்.
- IRB செயல்முறை பற்றிய தகவல் தொகுப்பு உங்களுக்கு வழங்கப்படும்.

## 10. தொடர்பு தகவல்

**அனைத்து உரிமைகோருபவர்களும் முகவரி அல்லது தொடர்பு தகவலில் ஏதேனும் மாற்றங்கள் இருந்தால் IRCC க்கு தெரிவிக்க வேண்டும்**. அனைத்து புதுப்பிப்புக்களையும் நிகழ்நிலையில், https://secure.cic.gc.ca/enquiries-renseignements/canada-case-cas-eng.aspx "Change of Contact Information" என்பதை தேர்ந்தெடுப்பதன் மூலம் பூர்த்தி செய்யலாம்.

## 11. குடிவரவு மற்றும் அகதிகள் சபை உரிமைகோரல் தொகுப்பு

தகுதியுள்ள அனைத்து உரிமைகோருபவர்களுக்கும் IRB உரிமைகோரல் தொகுப்பு வழங்கப்படுகிறது. இத்தொகுப்பு எப்படி உள்ளது பற்றிய முக்கியமான தகவல்களை கொண்டுள்ளது.

- உரிமைகோரல் படிவத்தின் அடிப்படையை பூர்த்தி செய்யவும்.
- தோன்றுவதற்கான அறிவிப்பை புரிந்து கொள்ளுதல்
- IRB இல் விசாரணைக்கு தயாராகுதல்

இந்த தொகுப்பில் பின்வருவன அடங்கும்:

### *உரிமைகோரல் படிவத்தின் அடிப்படை (Basis of Claim form)*

**இந்த ஆவணம் அனைத்து உரிமைகோருபவர்களுக்கும் கட்டாயமானதாகும். ஒவ்வொரு தனி நபரும் அவரவர் அடிப்படை உரிமைகோரல் படிவத்தை வைத்திருக்க வேண்டும்.**

நுழைவுத் துறைமுகத்தில் அகதி கோரிக்கையை நீங்கள் செய்தால், நீங்கள் உரிமைகோரல் படிவத்தின் அடிப்படையை பூர்த்தி செய்து, 15 நாட்களுக்குள் நேரடியாக IRB க்கு அனுப்ப வேண்டும். 15 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட்ட உரிமைகோரல் IRB ஆல் பெறப்படாவிட்டால், உங்கள் கோரிக்கை கைவிடப்பட்டதாக IRB அறிவிக்கலாம்.

CRPP மூலம் நிகழ்நிலையில் உங்கள் கோரிக்கையை நீங்கள் சமர்ப்பித்தால், உரிமைகோரலின் அடிப்படை படிவம் துணை ஆவணமாக பதிவேற்றப்பட வேண்டும். .

**குறிப்பு:** உரிமைகோருபவர் அவர்களின் ஆலோசகர் உரிமைகோரல் அடிப்படையை சரியான நேரத்தில் IRB க்கு சமர்ப்பிப்பதை உறுதி செய்வது பொறுப்பு.

### *உரிமைகோருபவரின் வழிகாட்டி (Claimant's Guide)*

உரிமைகோருபவரின் வழிகாட்டி IRB அகதிகள் பாதுகாப்பு பிரிவு செயல்முறையை விளக்குகிறது. மற்றும் அதை இங்கே காணலாம், https://irb.gc.ca/en/refugee-claims/Pages/ClaDemGuide.aspx.

### *நீங்கள் தோன்றுவதற்கான அறிவிப்பு குறித்த முக்கிய அறிவுறுத்தல்கள் (Notice to Appear)*

இந்த அறிவுறுத்தல்களில் ஒரு விசாரணைக்கு தோன்றுவதற்கான அறிவிப்பு மற்றும் மேலதிக அகதிகள் உரிமைகோரல் செயலாக்கத் தகவல்கள் பற்றிய முக்கியமான தகவல்கள் உள்ளன.

### *மாகாண மற்றும் பிராந்திய சட்ட உதவி தொடர்புத் தகவல்*

சட்ட ஆலோசகருக்கு நீங்கள் பணம் செலுத்த முடியாவிட்டால், நீங்கள் சட்ட உதவிக்கு தகுதியுடையவராக இருக்கலாம்.

### *ஆலோசகர் தொடர்பு தகவல் படிவம் (IRB/CISR 687):*

ஒரு உரிமைகோருபவர் வழக்கறிஞரை தக்க வைத்துக் கொண்டிருந்தால், (பொருத்தமான ஒழுங்குமுறை அமைப்பின் நல்ல நிலையில் உறுப்பினராக இருக்கும் வழக்கறிஞர் அல்லது ஆலோசகர்) ஆலோசகர் தொடர்பு தகவல் படிவம் (Counsel Contact Information form ) ஆலோசகரால் பூர்த்தி செய்யப்பட வேண்டும். மற்றும் IRB க்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்: (https://irb-cisr.gc.ca/en/forms/Documents/IrbCisr10102_e.pdf).

ஒரு மாகாண அல்லது பிராந்திய சட்ட உதவி சேவையால் ஆலோசனைக் கட்டணம் செலுத்தப்பட்டாலும் அது பொருந்தும்.

ஒவ்வொரு முறையும் உரிமைகோருபவர் ஆலோசகரை மாற்றும் போது ஒரு புதிய ஆலோசகர் தொடர்பு தகவல் படிவம் நிரப்பப்பட வேண்டும் மற்றும் IRB க்கு சமர்ப்பிக்க வேண்டும்.

### *கட்டணப் படிவம் இல்லாமல் பிரதிநிதித்துவ அறிவிப்பு (IRB/CISR 692):*

உங்கள் ஆலோசகருக்கு பணம் செலுத்தப்படாவிட்டால், அவர்கள் பிரதிநிதித்துவ அறிவிப்பை கட்டண படிவம் இல்லாமல் (Notice of Representation without a Fee form) பூர்த்தி செய்து IRB க்கு சமர்ப்பிக்க வேண்டும்.

நீங்கள் ஆலோசகரை தக்க வைத்துக்கொண்டால், ஆனால் **IRB/CISR 687** அல்லது **IRB/CISR 692** படிவத்தை IRB பெறவில்லை என்றால், உங்கள் சார்பாக IRB க்கு முன் செயல்பட உங்கள் ஆலோசகர் அனுமதிக்கப்படமாட்டார்.

## 12. அகற்றும் உத்தரவுகள்

பொதுவாக, பெரும்பாலான அகதி உரிமைகோருபவர்களுக்கு அவர் தகுதி முடிவின் போது அகற்றும் உத்தரவு வழங்கப்படுகிறது. உங்களுக்கு எதிராக நீக்குதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டால், அதன் நகல் உங்களுக்கு வழங்கப்படும்.

அகதிகள் பாதுகாப்பு பிரிவுக்கு பரிந்துரைக்கப்படுவதற்கு நீங்கள் தகுதியுடையவராக இருந்தால், உங்கள் உரிமைகோரலில் முடிவு செய்யும் வரை நீங்கள் கனடாவில் தங்கலாம். அகதிகள் பாதுகாப்பு பிரிவினால் உங்கள் உரிமைகோரல் ஏற்றுக் கொள்ளப்பட்டால், உங்கள் அகற்றுதல் உத்தரவை அமுல்படுத்த முடியாது மற்றும் நீங்கள் நிரந்தர குடியிருப்புக்கு விண்ணப்பிக்கலாம்.

நீங்கள் தகுதியற்றவராக கண்டறியப்பட்டால் , உங்கள் கோரிக்கை கைவிடப்படும், அல்லது திரும்பப் பெறப்பட வேண்டும் அல்லது அகதிகள் பாதுகாப்பு பிரிவு உங்கள் கோரிக்கையை நிராகரித்தால், உங்கள் அகற்றல் உத்தரவு அமலுக்கு வரும்.

உங்களுக்கு புறப்படும் உத்தரவு வழங்கப்பட்டிருந்தால், புறப்படும் உத்தரவு அமுலுக்கு வந்தவுடன் உங்களுக்கு அறிவுறுத்தப்படும், மேலும் நீங்கள் 30 நாட்களுக்குள் கனடாவை விட்டு வெளியேற வேண்டும். நீங்கள் கனடாவை விட்டு வெளியேறுவதற்கு முன் நீங்கள் திட்டமிட்ட புறப்படுவதற்கு முன்னதாக CBSA அலுவலகத்திற்கு அறிவிக்க வேண்டும். இதனால் அவர்கள் உங்கள் புறப்பாட்டை உறுதி செய்ய ஏற்பாடு செய்யலாம். நீங்கள் 30 நாட்களுக்குள் கனடாவை விட்டு வெளியேறவில்லை அல்லது CBSA உடன் உங்கள் புறப்பாடு உறுதி செய்ய ஏற்பாடு செய்யவில்லை என்றால், புறப்படும்உத்தரவு தானாகவே **நாடு கடத்தல் ஆணையாக** மாறும்.

## 13. கோவிட்-19 தகவல்

கோவிட்-19 IRCC செயல்முறைகளை எவ்வாறு பாதிக்கிறது என்பது பற்றிய தகவலுக்கு தயவு செய்து https://www.canada.ca/en/immigration-refugees-citizenship/ services/coronavirus-covid19.html பார்வையிடவும்.

இந்த நேரத்தில் எவ்வாறு பாதுகாப்பாக இருக்கவேண்டும் என்பது பற்றிய தகவலுக்கு தயவு செய்து கோவிட் -19 கனடாவின் பொது சுகாதார நிறுவனத்தின் இணையதளம் (Public Health Agency of Canada) இல் பார்க்கவும். கோவிட் -19 ஐ புரிந்து கொள்ள இந்த வலைத்தளம் பல மொழிகளில் ஆதாரங்களை கொண்டுள்ளது.